1974 சனவரி 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(அ) ஆம்.

(இ) இரண்டு முதுநிலை வகுப்பு மாணவர்கள் வேறு இரு இளநிலை வகுப்பு மாணவர்களுக்கு இடர் விளைவிக்கும் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டமையால் கல்லூரி முதல்வர் அவ்விரு முதுநிலை வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி மாறுவதற்குரிய சான்றிதழ்களை வழங்கினர். கல்லூரி முதல்வரின் இச்செய்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகத்தான் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. போதிய அறிவுரை கூறிய பிறகும் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை ஆதலால் கல்லூரி காலவரையின்றி 20–8–1973 முதல் மூடப்பட்டது. 27–8–1973 அன்று கல்லூரி திறக்கப்பட்டு தற்போது சரிவர இயங்கிவருகிறது.

Law College Hostel.

* 214 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a Law College student died in the Law College Hostel at Madras about the 20th October, 1973; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—(அ) ஆம்.

(இ) சட்டக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்த மாணவர் திரு. நாகராஜன் 19–10–1973ம் நாள் இரவு 9-15 மணியளவில் சட்டக் கல்லூரி விடுதி மாடி உச்சியிலிருந்து கீழே விழுந்து இறந்தார்.

திரு கே. டி. கே. தங்கமணி : விழுந்து இறந்ததாகத்தான் பத்திரிகையிலும் செய்தி வந்தது. என்ன காரணம் என்று ஏதாவது விசாரிக்கப்பட்டதா? மன நோய் காரணமாக நடந்ததா? வேறு ஏதாவது காரணமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவர் அவர்களே, 19–10–1973 இரவு தேர்வுக்காக படிக்க அந்த மாணவர் மூன்றாவது மொட்டை மாடியில் போய்ப் படித்துக்கொண்டிருந்தார். மாடி கைப்பிடிச் சுவரின் மீது உட்கார்ந்திருந்தபோது, அவரையும் அறியாமல் அயர்ந்து தூங்கிவிட்ட காரணத்தால், அங்கிருந்து கீழே விழுந்து விட்டார். கீழே விழுந்த பிறகு கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டு, கொண்டுசெல்லும் வழியில் அவர் இறந்தார். அவருடைய பெற்றோர்களுக்கு இந்த நிலைமை அறிவிக்கப்பட்டு, 20–10–1973 அன்று சவம் அவருடைய பெற்றோர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.